


**கலையகம் -2018-2019**

மாணவர்களின் கலை சார்ந்த ஆர்வத்தை மேம்படுத்தவும் கலைத்திறனை வளர்த்தெடுக்கவும் பெட்சிரியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கலையகம் என்கிற அமைப்பை உருவாக்கித் தமிழர் கலைகளைப் பயிற்றுவித்து வருகிறது.அவ்வகையில் 2018-2019 ஆம் ஆண்டுக்கான கலையகம் விழா 12.10.2018 வெள்ளிக்கிழமை கல்லூரிக் கலை அரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவிற்குச் சிறப்புவிருந்தினராக " மேற்குத் தொடர்ச்சி மலை"திரைப்படத்தின் **இயக்குநர் திரு.லெனின் பாரதி அவர்கள்** பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார்.




கலை என்பது சமூகப்பொறுப்பு மிக்கது. சமூக சிந்தனையற்ற கலைகளை மாணவர்களாகிய நீங்கள் புறக்கணிக்க வேண்டும். குறிப்பாக வணிக்கத்தை மையப்படுத்தி ஆபாசமான திரைப்படங்கள் பெருகியுள்ள இச்சூழலில் நல்ல திரைப்படங்களை மட்டும் கொண்டாடுங்கள் மற்ற திரைப்படங்கள் தானாகவே குறைந்துவிடும். மேலும் தமிழர்களின் ஆதிக் கலை வடிவமான பறை இசையை நிகழ்த்திய மாணவர்களையும்,

சமகால சமூக பிரச்சனைகளை மையப்படுத்தி மாணவர்கள் நடித்த நாடகத்தைக் குறித்தும் இயக்குநர் லெனின் பாரதி அவர்கள் தனது உரையில் பாராட்டிப் பேசி வாழ்த்தினார்.

இந்நிகழ்வுக்கு முன்னதாக, கலையக மாணவர்களுக்கு **நடிப்புப் பயிற்சியும் பறையிசைப் பயிற்சியும்** வழங்கப்பட்டது. இப்பயிற்சியைக் **கிராமியக் கலைப் பயிற்சியாளர் சேகுவேரா** அவர்கள் மிகச்சிறப்பான முறையில் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விழாவினைக் கலையகத்தின் மாணவர் தலைவர் பி.ராகுல் (எம்.ஏ ஆங்கில இலக்கியம் இரண்டாம் ஆண்டு), கலையகத்தின் மாணவ துணைத்தலைவர் தா.மேனகா (தொழில் மேலாண்மை,இரண்டாம் ஆண்டு) ஆகியோர் நெறிப்படுத்தினர்.கலையகத்தின் ஒருங்கிணைப்புக்



**சிறப்பு விருந்தினர் இயக்குநர் லெனின் பாரதி அவர்கள் குத்துவிளக்கேற்றும் காட்சி.அருகில் தமிழர் கலைப் பயிற்சியாளர் திரு.சேகுவேரா அவர்கள்**




**கலையகம் விழாவில் பங்கேற்ற மாணவர்கள்**



**சமகால சமூக நிகழ்வுகளை மையப்படுத்தி மாணவர்கள் நடித்த நாடகத்தில் ஒரு காட்சி**



**மாணவர்கள் நிகழ்த்தும் பறையிசை நிகழ்வு**



**சிறப்பு விருந்தினர் இயக்குநர் திரு லெனின் பாரதி அவர்களுடன் முதல்வர், துணை முதல்வர் மற்றும் கலையகத்தின் குழுவினர்கள்**